நிதித் (ஓய்வூதியம்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை.9.

**கடித எண் 52717/ நிதித் (ஓய்வூதியம்) துறை/2009–1, நாள்: 23.10.2009**

அனுப்புநர்
திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்,
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை–600 032.
தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை– 600 018. (பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை–600 018.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–600 018
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–600 018
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–600 002.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/மாவட்ட நீதிபதிகள்/முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள் (ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை–600 015 மூலமாக)

ஐயா,

பொருள்: அரசாணை எண். 408, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள். 25.8.09–க்கு தெளிவுரை வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண். 408, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள். 25.8.09.
2. தலைவர், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஓய்வு பெற்ற அலுவலர் நலச் சங்கம், சென்னை–9, அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனு நாள் 1.9.09.

-----------

பார்வை ஒன்றில் காணும் அரசாணை தொடர்பாக பார்வை இரண்டில் காணும் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஓய்வு பெற்ற அலுவலர் நலச் சங்கத்திடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை தொடர்பாகக் கீழ்க்கண்ட தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

**2.** பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, அரசுப் பணியில் வரையறுக்கப்படாத பணி (Non-Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium), தினக்கூலி (Daily wages) அடிப்படையில் பணிபுரிந்து 1.4.03க்கு முன்னர் நிரந்தர அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டவர்களின் மேற்கண்ட பணிக்காலங்களை ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்வது தொடர்பான ஆணைகள் வெளியிடும்போது, அவ்வாறு நிரந்தரப் பணியில் ஈர்க்கப்படும் முன் "பணிமுறிவு" இருக்கும் நேர்வுகளில் அத்தகைய பணிமுறிவை "பொருட்படுத்தாது விட" (Condonation) குறிப்பான ஆணையைச் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களே வழங்கலாம் எனவும் அத்தகைய பணிமுறிவுக் காலங்களை ஓய்வூதியப் பயன்களுக்கு கணக்கில் கொள்ளக் கூடாது எனவும், அறிவுறுத்தப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
இருப்புக் கோப்பு/உதிரி நகல்